முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1385

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.07.2023, சனிக்கிழமை

1. மண்ணுலகம் காக்கும் விதமாக
மாதவத்தை மக்களுக்கு தர்மமாக்கி
அண்ணலாக அற்புதம் நடத்துகின்ற
அரங்கனே ஆறுமுக ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
ஆசியதும் சோபகிருது மிதுனத்திங்கள் அரங்கனுக்கு சக்திபெருக எடுத்துரைப்பேன்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 30ம் நாள், 15.07.2023, சனிக்கிழமை)
வாசிநிலை மேம்படுத்தி உலகோர்க்கு வரமாக தன்சக்தியை வழங்கிவரும்
3. வருகின்ற அரங்கனே தர்மனே
வள்ளலே நீ தருகின்ற அருளமுதும்
வருமுலகில் உலகோர்க்கு பசிப்பிணி விரட்டுவதோடு
வல்லமைப்பட வாசி நிலையும் வசப்படுத்தி
4. வசப்படுத்தி ஞானியருள் ஞானியாக
வழிநடத்தி உலகோரெல்லாம் உன் வழியில்
வல்லமைபட உலகமாற்ற சேவையில்
பெரும்பங்கு கொள்ள வகை செய்யும்
5. செய்யவே அரங்கன் சுத்த சன்மார்க்க
சிறப்புநெறியை பின்பற்றி வந்தால்
ஐயன் முருகன் எனை காணும் ஆற்றலும் பலமும்
அருளாசியும் கூடி சிறக்க நேரும்
6. நேர்மை கொண்டு அரங்கன் தர்மத்தை
நிலவுலகோர் எங்கும் பரப்பி வந்தால்
வறுமை ஒழியும் வஞ்சகம் சூழ்ச்சி
களவு பயம் பொய் பொறாமை போன்ற இடர்பாடு

7. அத்தனையும் அகன்று மேவி மெய்ஞான வாழ்வாய்
மக்களுக்கு தித்திக்கும் வண்ணம்
மேலான அழியாமை கிட்டி
அமிழ்தம் என்கின்ற அற்புதத்தை அடைந்து அவரவரும் ஞானியாக நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–